பரமக்குடி நகராட்சி அலுவலகம்
நாள் .25.04.2023

**அன்புடையீர்**,

பரமக்குடி நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நிகழும் சுபகிருதுவருடம் சித்திரை மாதம் (28.04.2023) வெள்ளிகிழமை முற்பகல் 11.00 மணிக்கு கீழ்க்காணும் பொருள் குறித்த சாதாரணக் கூட்டம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்
பரமக்குடி நகர்மன்றம்

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2023ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.508, பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2023ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.509, பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் மார்ச் 2023ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.510, பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் மார்ச் 2023ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.511, பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள்.5 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 புதுநகர் மற்றும் வார்டு எண் 5 காந்தி நகர் ஆகிய பகுதிகளில் 15-வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020-21 ன் கீழ் தலா ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (1.00 லட்சம் லிட்டர் கொள்ளவு) கட்டுமான பணி முடிவுற்று குடிநீர் நீரேற்றக் குழாய்கள் பதிக்கும் பணி முடிக்கப்பட்ட நிலையில் உள்ளது. மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும். எனவே புதுநகர் மற்றும் காந்திநகர் ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு எமனேஸ்வரம் இளையான்குடி சாலை சந்திப்பில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு சொந்தமான காவேரி கூட்டு குடிநீர் திட்ட நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் குழாய்கள் மூலம் நீரேற்றம் செய்வதற்கு அனுமதி பெறுவதற்கு பணியின் அவசரம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம். |

<table>
<tr><td></td><td>

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண்.512, அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

</td></tr>
<tr><td>பொருள்.6</td><td>

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 05.04.2023-ன் தேதிய காணொலி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் ஒவ்வொரு நகராட்சிகளிலும் 2016-2017 ஆம் ஆண்டிற்கு முன்னால் அமைக்கப்பட்ட சாலைகளில் சேதமடைந்த சாலைகளை தேர்வு செய்து பராமரிப்பு பணிக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்து NSMT- திட்டம் 2022-23 ஆம் ஆண்டிற்கு நகராட்சி வருவாய் நிதியின் கீழ் அமைக்க உரிய கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் பேரில் பரமக்குடி நகராட்சிக்கு ரூ.80.00 இலட்சத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியதைத் தொடர்ந்து இந்நகராட்சியில் 2016-17ம் ஆண்டிற்கு முன்னால் அமைக்கப்பட்ட சாலைகளில் சேதமடைந்த சாலைகள் தேர்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

<table>
<tr><th>Sl. No</th><th>Details of works</th><th>Estimate Amount (Rs in lakh)</th></tr>
<tr><td>1.</td><td>Re- Laying of BT Surface by Using Paver Machine with CMP at C.S.M Boarding road-134032R633,sowhatthali street-134017R619, Santhaikadai Street-134033R632 in ward no. 17,32,33</td><td>20.00</td></tr>
<tr><td>2.</td><td>Providing and Laying of Paver block surface and Madhavan street -134018S129, Kallagar street(Perumal kovil side)- 134015R330, Kallagar street-1- 134015R338, Kallagar street-2-134015R339, ayyasami 2nd santhu 134017S136, ayyasami 1st santhu 134017L060, Umapathi subburayalu santhu-134017S137,Jinna street-134018S132 at Paramakudi Municipality in Ward No:15,17,18.</td><td>20.00</td></tr>
<tr><td>3.</td><td>Providing and Laying of Paver block surface and Construction of storm water Drain at Ambalakarastreet-134018R355, Kuthukal street- 134020S119,Manjal pattinam North 2nd street-134001S002 SPM Colony 2nd cross street-134022S062,SPM Colony 3rd cross street-134022S063 at Paramakudi Municipality in Ward No:01,18,20,22</td><td>20.00</td></tr>
<tr><td>4.</td><td>Providing and Laying of CC Surface and Kannisundharajan Street-134011R287, Pillaiyarkovil street-134009R196, Eswaran kovil Street-Back side- 134004R143, Pallivasal 2nd Cross Street-134004R136, Pallivasal 6th street Cross Street-134004R144 at Paramakudi Municipality in Ward No:04,09,11</td><td>20.00</td></tr>
<tr><td></td><td>Total</td><td>80.00</td></tr>
</table>

மேற்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நகராட்சி வருவாய் நிதி 2022-23 ன் கீழ் மேற்கொள்வதற்கும் உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளை NSMT 2022-23-ன் திட்டம் வாயிலாக நகராட்சி வருவாய்

</td></tr>
</table>

நிதி மூலம் மேற்கொள்ளவும் உரிய பிரேரணையை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களுக்கு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.513, அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள்.7

பரமக்குடி நகராட்சி பகுதிகளில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் வளர்ச்சிப்பணிகள் குறித்து பொங்கல் சிறப்பு மலரில் தினசரி நாளிதழில் விளம்பரங்கள் வெளியிட்ட வகையில் கீழ்க்காணும் விபரப்படியான பட்டியல்கள் நாளிதழ்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. பட்டியல் விபரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| **வ,எண்** | **நிறுவனம்** | **பட்டியல் தொகை** |
|---|---|---|
| 1. | தினத்தந்தி | ரூ.13545 |
| 2. | தினமலர் | ரூ.18869 |
| 3. | மாலைமலர் | ரூ.15540 |
| 4. | மாலைமுரசு | ரூ.15750 |
| | **மொத்தம்** | **ரூ.63,704** |

மேற்காணும் விபரப்படி பட்டியல் தொகை ரூ.63,704/-ற்கு செலவு மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.514, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.8

இந்நகராட்சி வருவாய் நிதியின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் 3 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளும் பணி ஆண்டு ஒன்றிற்கு ரூ.603.74 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண் 35945/2022/EA2-SWM-15 நாள் 10.01.2023 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி பணிக்கு 24.03.2023 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | M/S. Excernet,<br>No.8. MM Complex Road<br>Madurai - 625002 | Online Only |
| 2. | M/S. AVM Service Point<br>No.2., Thandal Kandasamy Street,<br>Rajapalayam | Online Only |
| 3 | M/s. Sri RamLabour Contract<br>Arasaradi Madurai - 16 | Online only |
| 4. | P.P.M.Meenakshi Groups<br>Madurai | Online only |

மேற்படி வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதிகள்

<table>
<tr><td></td><td colspan="3">அடங்கிய உறை ஆணையாளர் அவர்களால் 28.03.2023 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வுக்குழு மூலம் தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 4 ல் காணும் நிறுவனம் முன்வைப்பு தொகைக்கான வங்கி வரைவோலையை இவ்வலுவலகத்தில் செலுத்தப்படாத நிலையில் மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டதை தொடர்ந்து வ.எண் 3 க்கு தொழில்நுட்ப தகுதிகள் இல்லாத நிலையில் வ.எண் 1 மற்றும் 2 க்கு தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்குரிய (Price Bid) விலைப்பட்டியல் அடங்கிய உறை 29.03.2023 அன்று திறக்கப்பட்டதில் பின்வருமாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளன.</td></tr>
<tr><td></td><td></td><td>M/S. Excernet,<br>No.8. MM Complex Road<br>Madurai - 625002</td><td>மதிப்பீட்டை விட 0.08% குறைவு</td></tr>
<tr><td></td><td></td><td>M/S. AVM Service Point<br>No.2., Thandal Kandasamy Street,<br>Rajapalayam</td><td>மதிப்பீட்டை விட 0.002 % குறைவு</td></tr>
<tr><td></td><td colspan="3">மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள (0.08% மதிப்பீட்டை விட குறைவு) M/S. Excernet,, Madurai, என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை வருவாய் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.515, <u>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u></td></tr>
<tr><td>பொருள்.9</td><td colspan="3">இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 புதுநகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் உடைந்து கழிவுநீர் கால்வாயில் வெளியேறுவதால் அப்பகுதி வாழ் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளது. எனவே மேற்படி வார்டுகளில் நகர்மன்ற உறுப்பினர் பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களை சரி செய்துதரக் கோரியதன் அடிப்படையில் மேற்படி பழுதுகளை சரிசெய்ய உரிய மதிப்பீடுகள் தயார் செய்ய நகர்மன்றத் தலைவர் தெரிவித்ததைத் தொடர்ந்து அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.516, <u>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u></td></tr>
<tr><td>பொருள்.10</td><td colspan="3">இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 எஸ்.எஸ்.கோவில் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் பழுதாகி உள்ள நிலையில் கழிவுநீர் சாலையில் ஓடும் நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் கொசுக்களால் பொதுமக்களுக்கு நோய்தொற்று ஏற்படும் அபாய நிலையில் உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் தெரிவித்ததைத் தொடர்ந்து பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களை சரி செய்துதரக் கோரியதன் அடிப்படையில் மேற்படி பழுதுகளை சரிசெய்ய உரிய மதிப்பீடுகள் தயார் செய்ய நகர்மன்றத் தலைவர் தெரிவித்ததைத் தொடர்ந்து அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/- க்கு</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.517, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள்.11</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 ல் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் உடைந்து கழிவுநீர் கால்வாயில் வெளியேறுவதால் அப்பகுதி வாழ் பொதுமக்கள் மற்றும் பள்ளிகளுக்கு செல்லும் மாணவ மாணவியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளது. எனவே மேற்படி வார்டு நகர்மன்ற உறுப்பினர் பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களை சரி செய்துதரக் கோரி அளித்துள்ள மனுவின் அடிப்படையில் நகர்மன்றத் தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்களால் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பழுதுகளை சரிசெய்ய உரிய மதிப்பீடுகள் தயார் செய்ய நகர்மன்றத் தலைவர் தெரிவித்ததைத் தொடர்ந்து அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.518, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுசுகாதாரதத்தை பேணி காக்கும் வகையில் புதியதாக பொதுகழிப்பறை மற்றும் சமுதாயக் கழிப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ள கீழ்குறிப்பபிட்ட விபரப்படி பணிகள் தேர்வு செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்க கோரி ரூ.102.50 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்ட பிரேரணை தயார் செய்து மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று கடிதம் அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். அனுமதிக்கு
<table>
<tr><th>வ,எ ண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத் தில்</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு 36 பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கழிப்பறையை அகற்றி புதியதாக பொதுகழிப்பறை கட்டும் பணி</td><td>ரூ.40.00</td></tr>
<tr><td>2</td><td>வார்டு 6 மாமாங்கதெப்பக்குளம் ஈஸ்வரன்கோவில் தெருவில் உள்ள பழைய கழிப்பறையை அகற்றி புதியதாக சமுதாயக்கழிப்பறை கட்டும் பணி</td><td>ரூ.35.00</td></tr>
<tr><td>3,</td><td>வார்டு 9 மலையான்குடியிருப்பு பகுதியில் உள்ள பழைய கழிப்பறையை அகற்றி புதியதாக சமுதாயக்கழிப்பறை கட்டும் பணி</td><td>ரூ.32.50</td></tr>
</table>
மேற்காணும் விபரப்படியான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் தொகை போக கூடுதல் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு</td></tr>
</table>

| | |
|---|---|
| | மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிகளுக்கான கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.519, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கபட்டது.** |
| பொருள்.13 | 15th CFC 2022-23 UnTied Grand திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33 ல் காமராஜர்நகர் பகுதியில் புதியதாக தார்சாலை அமைக்கும் ரூ.16.40 இலட்சத்திலான பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் 3096/2022/பி2 நாள் 21.03.2023 ம் தேதிய உத்தரவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 10.04.2023 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/s. IVR & Co., பரமக்குடி — Online Only<br>2. R.சீனிவாசகம் ஒப்பந்ததாரர், கமுதி — Online Only<br>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதிகள் அடங்கிய உறை ஆணையாளர் அவர்களால் 12.04.2023 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வுக்குழு மூலம் 12.04.2023 அன்று தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்குரிய (Price Bid) விலைப்பட்டியல் அடங்கிய உறை 12.04.2023 அன்று திறக்கப்பட்டதில் பின்வருமாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளன.<br>1. M/s. IVR & Co., பரமக்குடி — மதிப்பீட்டை விட 4.95 % அதிகம்<br>2. R.சீனிவாசகம் ஒப்பந்ததாரர், கமுதி — மதிப்பீட்டை விட 9.97 % அதிகம்<br>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள (மதிப்பீட்டுத் தொகையை விட 4.95 % அதிகம்) M/s. IVR & Co., நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை குறைத்துத் தர 13.04.2023 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர் மேற்படி பணியை மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவு என்ற விலைவிகிதத்தில் செய்து தர ஒப்புதல் வழங்கியுள்ளார். எனவே மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ( 0.05% மதிப்ட்டை விட குறைவு ) கொடுததுள்ள M/s. IVR & Co., நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தைலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>அலுவலகக் குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் இப்பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (0.05% மதிப்ட்டை விட குறைவு )கொடுத்துள்ள M/s. IVR & Co., பரமக்குடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.520, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கபட்டது.** |

<table>
<tr><td>பொருள்.14</td><td>

15th CFC 2022-23 UnTied Grand திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9 ல் கிறிஸ்த்துவ காலனி 2-வது தெருவில் புதியதாக பேவர் பிளாக் சாலை அமைக்கும் ரூ.10.00 இலட்சத்திலான பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் 3096/2022/பி2 நாள் 21.03.2023 ம் தேதிய உத்தரவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 10.04.2023 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

<table>
<tr><td>1.</td><td>M.சங்கர், ஒப்பந்ததாரர் பரமக்குடி</td><td>Online Only</td></tr>
<tr><td>2.</td><td>S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>Online Only</td></tr>
</table>

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதிகள் அடங்கிய உறை ஆணையாளர் அவர்களால் 12.04.2023 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வுக்குழு மூலம் 12.04.2023 அன்று தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்குரிய (Price Bid) விலைப்பட்டியல் அடங்கிய உறை 12.04.2023 அன்று திறக்கப்பட்டதில் பின்வருமாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளன.

<table>
<tr><td>1.</td><td>M.சங்கர், ஒப்பந்ததாரர் பரமக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.05 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>S.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.71 % அதிகம்</td></tr>
</table>

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள (0.05% மதிப்பீட்டை விட குறைவு) M.சங்கர், ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் இப்பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (0.05% மதிப்ட்டை விட குறைவு ) கொடுத்துள்ள M.சங்கர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.521, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கபட்டது.**

</td></tr>
<tr><td>பொருள்.15</td><td>

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 க்குட்பட்ட பகுதியில் புதிய சிறுமின்விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.266 நாள் 19.10.2022-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு 20.10.2022 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்காணும் பணி வேண்டும் போது போதுமான அளவு நீர் ஆதாரம் இல்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டது. அப்பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தால் பயனற்றதாகிவிடும் என்ற காரணத்தால் மேற்படி பகுதிக்கு பதிலாக வார்டு எண்.13 க்குட்பட்ட அப்பகுதி மக்களின் வேண்டுகோள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் மூலம் வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில் நகர்மன்ற தலைவர்

</td></tr>
</table>

அவர்களின் உத்தரவின்படி மேற்கண்ட பணியினை திரு.M.சங்கர் ஒப்பந்தாரர் மூலம் அனுமதிக்கப்பட்ட 0.02 % சதவீதம் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.522, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30-க்குட்பட்ட தெருக்களில் ஆங்காங்கே மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் உடைந்துள்ளதால் கழிவுநீர் சாலை வழியாக வெளியேறுகிறது. இதனால் அப்பகுதியில் செல்லும் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமப்படுவதோடு சுகாதாரக்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களை சீரமைக்க உரிய வழிவகை செய்து தருமாறு அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து மேற்படி பழுதுபணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.523 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.17

இந்நகராட்சி பொது நிதியின் கீழ் இவ்வலுவலக பயன்பாட்டிற்கு கணிணிகள் மற்றும் இதர பாகங்கள், டோனர்கள் ரூ2.50 இலட்சத்தில் வாங்குவதற்கு 11.04.2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | Best Networks<br>189B, First Floor, Railway Feeder Road,<br>Opp & Near to New Bus stand Traffic Signal,<br>Ramanathapuram - 623504 | மதிப்பீட்டை விட 0.20 % குறைவு |
| 2. | Unique Technologies Computer & Networking<br>96/2, N.C.S.C Complex 1st Floor, Swami Vivekanandar Salai, Ramanathapuram | மதிப்பீட்டை விட 0.60 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள Best Networks, Ramanathapuram நிறுவனத்தின் ஒந்தப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.524, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

பொருள்.18

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 24 காட்டுப்பரமக்குடி மணிநகர் பகுதியில் உள்ள 50,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மிகவும் பழுதடைந்து உள்ளது. அவ்வப்போது கான்கீரிட் சிலாப் துண்டுகளாக உடைந்து விழுகின்றது. இதனால் மேற்படி பகுதியைச் சுற்றியுள்ள வீடுகளில் உள்ள

<table>
<tr><td></td><td>பொதுமக்கள் மிகவும் அச்சத்தில் உள்ளனர். எனவே பொதுமக்களின் நலன் கருதி 1995 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை பாதுகாப்பாக இடித்து அப்புறப்படுத்தும் பொருட்டு உரிய அனுமதி பெறுவதற்கு கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணை சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.525, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்.19</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 மற்றும் வார்டு எண்.34 க்குட்பட்ட கீழ்க்கண்ட சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி வாழ் பொதுமக்கள் நடந்து செல்வதற்கே மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் வாகனங்களில் செல்வோர் தடுமாறி கீழே விழும் சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே மேற்படி சாலைகளை புதுப்பித்து தருமாறு அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் விண்ணப்பம் அளித்துள்ளதைத் தொடர்ந்து நகர்மன்றத்தலைவர் அவர்களின் நேரடி ஆய்வு அறிவுரையின்பேரில் மேற்படி சாலைகளை மேம்படுத்த கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>வார்டுஎண் 4 க்குட்பட்ட பாவு தொழிலாளர் சங்க குறுக்குத் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை சீரமைத்தல்</td><td>ரூ.3.00 இலட்சம்</td></tr>
<tr><td>2</td><td>வார்டுஎண் 34 பர்மா காலனி பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்</td><td>ரூ.4.00 இலட்சம்</td></tr>
</table>
மேற்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.<br>தீர்மானம் எண்.526, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்.20</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13-க்குட்பட்ட இராமலிங்க அடிகளார் தெரு மற்றும் விவேகானந்தா வாசக சாலை பகுதியில் ஆங்காங்கே மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் உடைந்துள்ளதால் கழிவுநீர் சாலை வழியாக வெளியேறுகிறது. இதனால் அப்பகுதியில் செல்லும் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமப்படுவதோடு சுகாதாரக்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களை சீரமைக்க உரிய வழிவகை செய்து தருமாறு அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து மேற்படி பழுதுபணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,50,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.527, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td>பொருள்.21</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து மாதவன் நகர், மற்றும்  கீழப்பள்ளிவாசல் தெருவிற்கு செல்லும் பகிர்மானக் குழாய்கள் மழைநீர் வடிகாலுக்கு அடியில் செல்வதால் குடிநீரில் கழிவுநீர் அடிக்கடி கலப்பதால் மேற்படி பகிர்மான குழாய்களை புதியதாக மாற்றியமைக்கவும் பூவைசிய இந்திரகுல தெரு, மணிநகர், பாலன்நகர், எழில்நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பொருட்டு மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி ரூ.10.00 இலட்சத்திலான பணிக்கு 21.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><td>1.</td><td>திரு.S.பாலசுப்பிரமணியன்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.20% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.A.ஞானபிரகாசம்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.70% அதிகம்</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரரின் ஒந்தப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு.<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை குடிநீர் விநியோக நிதி மூலம் மேற்கொள்ளலாம்.<br>
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
தீர்மானம் எண்.528,  அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்.22</td><td>மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 18.04.2023 முதல் 19.04.2023 வரை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகைபுரிவதை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.இ2/18232/2023 நாள்:13.04.2023 அன்று பொறுப்பு அலுவலர்கள் நியமித்த அந்தந்த பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட தியாகி இம்மானுவேல் சேகரனார் நினைவிடத்திற்கு மேதகு தமிழக ஆளுநர் 19.04.2023 அன்று வருகைபுரிவதால் மேற்படி நினைவிடத்தை சுற்றியுள்ள பகுதிகள், CSM போர்டிங் ரோடு, பேருந்து நிலைய நுழைவாயில், உட்புறம் மற்றும் பிரதான சாலை ஆகியவற்றில் உள்ள பள்ளங்களை கான்கிரீட் கலவை கொண்டு நிரப்புதல், பேருந்து வழித்தடத்தட போர்டுகள் செய்தல், நினைவிடத்தில் ஷாமியான பந்தல் அமைத்தல், பிளாஸ்டிக் சேர்கள், VIP சேர்கள் ஏற்பாடு செய்தல், தண்ணீர் பாட்டில், கேக் மற்றும் தேநீர் ஏற்பாடுகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள குறுகிய காலமே உள்ளபடியால் பணியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு உரிய காலத்திற்குள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட செலவினத் தொகை ரூ.1,40,000/.க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணியின் அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்</td></tr>
</table>

திரு.K.சண்முகம் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக செய்து முடித்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை குடிநீர் விநியோக நிதி மூலம் மேற்கொள்ளலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று இந்நகராட்சியில் பதிவு பெற்ற திரு.K.சண்முகம் ஒப்பந்ததாரர் மூலம் பணியை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.529, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

பொருள்.23

பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 51 பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி 51 Bov வாகனங்களும் கொள்முதல் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டதால் 51 Bov வாகனங்களில் 30 Bov வாகனங்கள் மிகவும் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. மேலும் தற்போது 21 Bov வாகனங்கள் மட்டும் இயக்கப்பட்டு வருகிறது அந்த வாகனங்களும் அடிக்கடி பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே பொதுசுகாதார பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மை பணியின் முக்கியத்துவம் கருதியும், 21 Bov வாகனங்களின் பழுது பணிகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வாகன எண் மற்றும் வகை | வரப்பெற்ற நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை | |
|---|---|---|---|
| | | A.ஞானப்பிரகாசம்,ஒப்பந்ததாரர், பரமக்குடி | S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரர், பரமக்குடி |
| 1 | BOV மூன்று சக்கர வாகனங்கள் பழுதுப்பணி மேற்கொள்ளுதல் | ரூ.1048938/– | 990000/– |

மேற்கண்ட Bov வாகனங்களில் பழுதுபணிகளை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய எஸ்.பாலசுப்பிரமணியன் என்ற ஒப்பந்ததாரருக்கு மன்றம் அனுமதித்துள்ள தொகை ரூ.10.00 உத்தேச செலவினத்திற்குள் முதற்கட்டமாக **11** Bov வாகனங்களில் பழுதுபணிகளை சரிசெய்து வழங்க மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அங்கீகரிக்கலாம்

2. குறைந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய எஸ்.பாலசுப்பிரமணியன் என்ற ஒப்பந்ததாரர் பரமக்குடி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.530, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

பொருள்.24

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 25 வார்டு பகுதிகளில் Exernet, Madurai என்ற நிறுவனம் 185 துப்புரவுப்பணியாளர்களைக் கொண்டு 01.03.2019 முதல் இன்று வரை துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 28.02.2021ந் தேதியுடன் முடிவடைவந்ததால், மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட

| | |
|---|---|
| | நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையில், மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வந்ததால், மேலும், மேற்கண்ட நிறுவனத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனையின்படி பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மை பணிகளின் முக்கியத்துவம் கருதியும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1349 நாள்.11.02.2021–இல், தற்போது துப்புரவு பணி மேற்கொண்டு வரும் Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கண்ட ஒப்பந்த பணிக்காலம் 28.02.2022 அன்றுடன் முடிவடைந்ததால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வருவதால், Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு 01.03.2022 முதல் 30.04.2022 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1559, நாள்.25.01.2022ன்படி, 01.03.2022 முதல் 30.04.2022 வரை அதே ஊதிய விகித்தில் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 30.04.2022வுடன் முடிவடைந்ததால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, மேற்கண்ட நிறுவனம் எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவுபணிகள் மேற்கொண்டு வருவதால் Exernet, Madurai என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் இந்நகர்மன்ற தீர்மான எண்.55 நாள் 31.05.2022ன்படி 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 138, நாள்.25.08.2022ன்படி, 01.08.2022 முதல் 31.10.2022 வரை அதே ஊதிய விகித்தில் மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 216, நாள். 19.10.2022ன்படி, 01.11.2022 முதல் 31.01.2023 வரை அதே ஊதிய விகித்தில் மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.மேலும் இந்நகர் மன்ற தீர்மான எண்.415 நாள்.25.01.2023–ன் படியும் 01.02.2023 முதல் 31.03.2023 வரை அதே ஊதிய விகிதத்தில் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br>தற்சமயம், மேற்கண்ட ஒப்பந்த பணிக்காலம் 31.03.2023 அன்றுடன் முடிவடைவதால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணப்பத்தின்படியும், மேலும் 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒரு மாத காலங்களுக்கு Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.04.2023 முதல் 30.04.2023 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு துப்புரவுப்பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிடவும் அதற்கான தொகை SUC மற்றும் பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.531, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.25 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் வாகனங்களை நகர்மன்ற தீர்மான எண்.1047 நாள் 31.08.2019ன் படி, Exsernet, Madurai என்ற நிறுவனம் 10 ஓட்டுநர்களை கொண்டு 01.12.2019 முதல் 31.10.2020 வரை பணிகள் மேற்கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து, ஓட்டுநர் பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி பொதுசுகாதார வாகனங்களை இயக்கி உள்ளதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண்.1275 நாள்.28.10.2020–இன்படி, 01.11.2020 முதல் 31.10.2021 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பொதுசுகாதார வாகனங்களை இயக்கிட Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி |

| | |
|---|---|
| | நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்றத் தீர்மானம் 1481 நாள் 29.10.2021ன்படி அதே ஊதிய விகிதத்தில் மூன்று மாதங்களுக்கு 01.11.2021 முதல் 31.01.2022 வரை 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1550, நாள்.25.01.2022ன்படி, அதே ஊதிய விகிதத்தில் 01.02.2022 முதல் 30.04.2022 வரை மேலும், மூன்று மாதங்களுக்கு 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.57 நாள்.31.05.2022ன் படி அதே ஊதிய விகிதத்தில் 01.05.2022 முதல் 31.07.2022 வரை மேலும், மூன்று மாதங்களுக்கு 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.139 நாள் 25.08.2022ன்படி அதே ஊதிய விகிதத்தில் 01.08.2022 முதல் 31.10.2022 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு 10 ஓட்டுநர்களைக் கொணடு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.215 நாள் 19.10.2022ன்படி அதே ஊதிய விகிதத்தில் 01.11.2022 முதல் 31.01.2023 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு 10 ஓட்டுநர்களைக் கொணடு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதனை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.416 நாள்.25.01.2023ன் படி அதே ஊதிய விகிதத்தில் 01.02.2023 முதல் 31.03.2023 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு 10 ஓட்டுநர்கள் கொண்டு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.03.2023ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br>எனவே Exsernet, Madurai என்ற நிறுவனத்தின் மூலம் 10 ஓட்டுநர்களைக் கொண்டு பொது சுகாதார வாகனங்களை இயக்கும் பணிகளை எவ்வித புகாருக்கும் இடமின்றி மேற்கொண்டு வருவதாலும், பொதுசுகாதார அவசியத்தினை கருத்தில் கொண்டும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணபத்தின்படியும், மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒரு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 10 ஓட்டுநர்கள் பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்ய நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒரு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 10 ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.532, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.26 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் உழவர் சந்தை, வாரச்சந்தை மற்றும் ஜீவா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள நுண்ம உரக்கூட மையங்களில், தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 15 பணியாளர்களைக் கொண்டு, உரம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1154 நாள் 26.02.2020ன் படி, Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 28.02.2021 வரை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, நுண்ம உரக்கூட பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி உரம் தாயாரிக்கும் பணிகள் நடைபெற்றதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண்.1351 நாள். 11.02.2021–இன்படி, 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 5 பணியாளர்களை பணி அமர்த்திட Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1561, நாள்.25.01.2022ன்படி, 01.03.2022 முதல் 30.04.2022 வரை இரண்டு மாத காலங்களுக்கு பணி அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்ற |

| | |
|---|---|
| | தீர்மான எண்.61 நாள் 31.05.2022ன்படி 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நிட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.07.2022ம் தேதியுடன் முடிவடைந்ததால் இந்நகர்மன்ற தீர்மான எண்.137 நாள் 25.08.2022ன்படி 01.08.2022 முதல் 31.10.2022 வரை மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நிட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நகர்மன்ற தீர்மான எண்.217 நாள் 19.10.2022ன்படி 01.11.2022 முதல் 31.01.2023 மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.மேலும் நகர்மன்றதீர்மான எண்.417 நாள்.25.01.2023–ன்படி 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாதத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணிநீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.03.2023ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br>எனவே, Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு, உழவர் சந்தை, வாரச்சந்தை மற்றும் ஜீவாநகர் ஆகிய இடங்களில் உள்ள நுண்ம உரக்கூட மையங்களில் தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 15 பணியாளர்களைக் கொண்டு, பொதுசுகாதார திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் அவசியத்தினை கருத்தில் கொண்டும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணப்பத்தின்படியும், மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.04.2023 முதல் 30.04.2023 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 15 பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 01.04.2023 முதல் 30.04.2023 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் நுண்ம உரக்கூடங்களின் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட செலவினங்களை குப்பை வரி (SUC) யிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.533, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.27 | பரமக்குடி நகராட்சியில் பாரதப் பிரதமரின் சாலையோர வியாபாரிகளுக்கான கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகள் 320/– நபர்களுக்கு வங்கி மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் சாலையோர வியாபாரிகள் வியாபாரம் செய்யும் பகுதிகளுக்கு சென்று குடும்ப விபரங்களை (Socio –Economic Profiling Application ) கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு நபரின் விபரங்களை பதிவு செய்ய ரூ.40/– வீதம் 320 நபர்களுக்கு ரூ.12,800/– உத்தேச செலவினம் ஆகும். மேற்படி பணியினை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் தனி நபர் மூலம் இப்பணியினை மேற்கொள்ளலாம். அதற்குரிய செலவினத்தை மேற்படி திட்டத்தின் கீழ் IPMS மூலம் இந்தியன் வங்கி வரப்பெற்ற நிதியிலிருந்து மேற்கொள்ளவதற்கு உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.534, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.28 | நகர்மன்ற தீர்மான எண். 445 நாள்24.03.2023ன் படி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமிநாசினி பொருட்கள் கொள்முதல் செய்ய சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி 21.04.2023 அன்று கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.<br><br>1. நீர்த்த சுண்ணாம்புத்துாள் – 10000கிலோ<br>2. பிளீச்சிங் பவுடர் – 5000 கிலோ |

| வ.எண் | விநியோம் செய்ய வேண்டிய கிருமிநாசினி மற்றும் சுகாதார கருவிகள் விபரம் | Popular Chemicals, 23C Chithambaram Nagar, Saravanampatti, Coimbatore -641035 | SBS & Co No.65/33 Plat No.7 Sri sivanatha Street, Kalanivasal, Karaikudi-630 002 |
|---|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்புத்துாள் 10000 கிலோ | ரூ.112100/– | ரூ.106200/– |
| 2. | பிளிச்சிங் பவுடர் 5000கிலோ | ரூ.236000/– | ரூ.230100/– |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு கிருமிநாசினிகள் விநியோகம் செய்ய ஒப்பந்தபுள்ளி வழங்கிய SBS & Co Karaikudi என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அங்கீகரிக்கலாம்

2.குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய SBS & Co, Karaikudi என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.535, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

பொருள்.29

நகர்மன்ற தீர்மான எண்.127 நாள் 25.08.2022ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் 50 DBC பணியாளர்களை கொண்டு டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள 01.11.2022 முதல் 30.04.2023 வரை 6 மாதகால பணி மேற்கொண்ட நிலையில்30.04.2023 –ம் தேதியுடன் முடிவடைவதால் தொடர்ந்து மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் அவர்களின் அறிக்கையின்படி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவித்த பழைய தினக்கூலி ஊதிய விகிதத்துடன் கூடுதலாக EPF ESI மற்றும் இதர செலவினங்களுடன் 01.05.2023 முதல் 31.07.2023 வரை மூன்று மாத காலத்திற்கு ஏற்கனவே பணிமேற்கொண்டு வந்த நிறுவனமான Exsernet Madurai என்ற நிறுவனத்தின் மூலம் அரசு வழிகாட்டுதலின்படி பணி மேற்கொள்வதற்கு பணிநீட்டிப்பு உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.536, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.30

பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான கைக்கோலார் ஊரணி உழவர் சந்தை பின்புறம் உள்ள சீட்டு போட்ட திறந்த வெளி கடைகளுக்கு 2023–2026–ம் ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் பெற கீழ்க்கண்டவாறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | குத்தகைதாரரின் பெயர் | ஒரு மாத வாடகை தொகை |
|---|---|---|
| 1 | J.சரவணன் த/பெ.ஜெகன்மணி | 4300/– |
| 2 | A.கதிர்வேல் த/பெ.அங்குச்சாமி | 4400/– |

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேற்படி குத்தகை உரிமத்திற்கு உச்ச வரம்பு தொகையாக திரு. J.சரவணன் என்பவரை விட கூடுதலாக வாடகை தொகை செலுத்த திரு. A.கதிர்வேல் சம்மதம் தெரிவித்தன் பேரில் அன்னாருக்கு உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | <u>**அலுவலகக்குறிப்பு**</u><br>**மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**தீர்மானம் எண்.537, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.31 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதிவாதியாக கொண்டு திரு.கௌதம் என்பவர் விபத்து இழப்பீடு தொடர்பாக சார்பு நீதிமன்றம் பரமக்குடி கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.MACOP 26/2023–ல் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.இளங்கோவன் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்தி முடித்தற்கான வழக்கு கட்டணத்தொகைக்கு ஆகும் செலவின தொகையினை பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>**அலுவலகக்குறிப்பு**</u><br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.538, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.32 | திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் தினசரி 100 கிலோவிற்கு மேல் அல்லது 5000ச.மீட்டர் பரப்பளவுள்ள இடங்களில் குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்கள் பெருமளவு குப்பை உருவாக்குபவர்கள்ஆவர் (Bulk waste generator) இவர்கள் உருவாக்கும் மக்கும் குப்பைகளை தங்களது சொந்த பொறுப்பிலேயே இறுதியாக்கம் செய்திடவும் மக்காத உலர் கழிவுகளை மட்டுமே உள்ளாட்சி அமைப்புகள் மூலம் சேகரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>பரமக்குடி நகராட்சி துணை விதிகளில் பெருமளவு குப்பை உருவாக்குபவர்கள் மக்கும் குப்பைகளை தங்களது சொந்த பொறுப்பிலே இறுதியாக்கம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இவ்வலுவலக அறிவிப்பில் பெருமளவு குப்பைகள் உருவாக்கும் நிறுவனங்களுக்கு தங்களது சொந்த பொறுப்பில் இறுதியாக்கம் செய்து கொள்வது சம்மந்தமாக இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும்,<br>நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் பெருமளவு குப்பைகள் உருவாக்கும் நிறுவனங்களை தங்களது மக்கும் குப்பைகளை இறுதியாக்கம் செய்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>பெருமளவு குப்பைகள் உருவாக்கும் நிறுவனங்கள் தங்கள் வளாகப் பகுதியிலேயே குப்பைகளை இறுதியாக்கம் செய்திட போதுமான இடவசதியும் பொருளாதார வசதியும் இல்லாத காரணங்களால் அனைவரும் பொதுவான இடத்தில் தனியார் மூலம் குப்பைகளை இறுதியாக்கம் செய்து கொள்வதாக தெரிவித்துள்ளனர்.<br>Evergeen Environment Services, Ramanathapuram என்ற நிறுவனம் பெருமளவு குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்களின் மக்கும் குப்பைகளை தங்களது நிறுவனத்தின் சொந்த பொறுப்பிலே சேகரித்து உரம் தயாரித்து இறுதியாக்கம் செய்ய விருப்பம் தெரிவித்தும் அதற்கான இடத்தினை ஒதுக்கீடு செய்து வழங்க கேட்டுக் கொண்டுள்ளது.<br>மத்திய அரசின் பெருமளவு குப்பைகளை உருவாக்குபவர்களுக்கான வழிகாட்டுதல்களில் உள்ளாட்சி அமைப்புகள் பெருமளவு குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்களுக்கு பொதுவான இடத்தில் இறுதியாக்கம் செய்ய தேவையான நிதி உதவி அல்லாத ஏனைய உதவிகளை செய்து கொடுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரையில் பெருமளவு குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்களின் குப்பைகளை தனியார் மூலம் இறுதியாக்கம் செய்திட மேற்படி தனியார் நிறுவனத்திற்கு நகராட்சி உரக்கிடங்கில் தேவையான இடத்திற்கு தரை வாடகை நிர்ணயம் செய்து கொடுத்து இட வசதி வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன் அடிப்படையில் பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ), சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் ஆய்வு செய்து நகராட்சி கலவை உரக்கிடங்கில் 98’’ x 54’’ = 5292 சதுர அடி உள்ள சிமெண்ட் கான்கிரிட் தரைதளத்துடன் கூடிய பழைய விண்ட்ரோஸ் |

செட்டில் Evergreen Envoirnment Services, Ramanathapuram என்ற நிறுவனம் நுண்ம உரக்கூடம் அமைத்துகொள்தவற்கும், அதற்கான தரை வாடகையாக மாதம் ஒன்றிற்கு ரூ.5750/– நகராட்சிக்கு செலுத்துவதற்கும், மேற்கண்ட தரைவாடகையினை 3 வருடங்களுக்கு ஒரு முறை 15 சதவீதம் உயர்த்தி வசூல் செய்வதற்கும், நகராட்சி நிர்வாக காரணங்களுக்குட்பட்டும், வெளிசந்தை மதிப்பீட்டின்படி தேவைப்படின் மாற்றியமைக்கப்படும் என்ற நிபந்தனையுடன் மேற்கண்ட இடத்தினை 5 வருடங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு–**

1. தரை வாடகை ரூ.5750/– நிர்யணம் செய்து கலவை உரக்கிடங்கில் உள்ள பழையவிண்ட்ரோஸ் செட்டினை வாடகைக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. தரை வாடகையினை 3 வருடங்களுக்கு ஒரு முறை 15 சதவீதம் உயர்த்தி வசூல்செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட இடத்தினை 5 வருடங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.539, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

பொருள்.33

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2023-24 நகராட்சிகளில் புதிய வாரச்சந்தைகள் மற்றும் தினசரி சந்தைகள் அமைப்பது குறித்து நகராட்சி நிர்வாகத் துறை மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. அதன் பேரில் பரமக்குடி நகராட்சியில் வாரச்சந்தை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.20543/2021/தி1-4 நாள் 03.04.2023ல் மேற்படி வாரச்சந்தை அமைக்க விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட சி.எஸ்.எம் போர்டிங் சாலையில் உள்ள வாரச்சந்தை வளாகத்தில் புதிய வாரச்சந்தை கட்டிடம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய 20.04.2023 அன்று தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் முதற்கட்டமாக திட்டப்பிரேரணை தயார் செய்ய மண் பரிசோதனை சான்று தயார் செய்து கொடுக்க கீழ்க்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | M/s SPT Consultancy Service, Perambur, Chennai | Rs.46000 |
| 2. | M/s T.S.Associares , Sakthi Nagar, Porur, Chennai | Rs.51500 |
| 3. | M/s R.R.Harshi, K.K.Nagar, Chennai | Rs.49000 |

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s SPT Consultancy Service, Perambur, Chennai என்று நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி நிறுவனத்தின் மூலம் தயார் செய்து கொடுக்கப்படும் விரிவான திட்ட அறிக்கைக்குரிய செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2.குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s SPT Consultancy Service, Perambur,

| | |
|---|---|
| | Chennai நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.540, அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| பொருள்.34 | இந்நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.541, அலுவலகக்குறிப்பு பார்வையிடப்பட்டது** |
| பொருள்.35 | பரமக்குடி நகராட்சியில் அவசரம் அவசியம் கருதி நிர்வாகத்தின் மூலமாக ஜெராக்ஸ், ப்ளக்ஸ் போர்டு, தணிக்கை அறிக்கை 2021-22 மற்றும் சொத்துவரி கேட்பு அறிவிப்பு நோட்டீஸ் தயார் செய்யப்பட்ட செலவினத்திற்காக ரூ.50000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.542, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.36 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனத்தின் (TN-65Z-9597) க்கு பழுது பணிகளை சரி செய்யும் பணிக்கு ஏற்படும் செலவினத்தொகை ரூ.86,000/-க்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் மோட்டார் நிறுவனங்களிடம் 14.03.2023 விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| | | |
|---|---|---|
| 1. | N.கணபதி மோட்டார் ஒர்க்ஸ்<br>மதுரை மண்டபம் ரோடு,<br>பரமக்குடி | ரூ,85,070/- |
| 2. | M/S. செந்தில் மோட்டார் ஒர்க்ஸ் அண்ணாநகர், பரமக்குடி | ரூ.88,200/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள N.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு, மன்றம் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. நகர்மன்றதலைவர் அவர்களின் முன்அனுமதியின் படி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்,
2. மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.543, அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தலைவர்**
**பரமக்குடி நகர்மன்றம்.**